# <u>தமிழ்நாடுமின்சாரஒழுங்குமுறைஆணையம்</u>

(அறிவிக்கை எண்.த.மி.ஒ.ஆ./ஒழுங்குமுறைவிதிகள்/கமற்றும்அ/4/2–7, நாள், 27– 06–2012)

தமிழ்நாடுமின்சாரஒழுங்குமுறைஆணையம், 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (எ) கூறின் மூலம் அதற்குவழங்கப்பட்டுள்ள அதிகாரத்தினைச் செலுத்தி, 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் ஒழுங்குமுறை விதிகளை, 2004 பிப்ரவரி, 18 நாளிட்டதமிழ்நாடுஅரசிதழில் குறித்துரைத்துள்ளதுமற்றும் அறிவிக்கை செய்துள்ளது என்பதாலும்,

மற்றும் முன்னதாக தனிப்பட்ட முறையில் உள்ளடக்காத ஒரு சில செயற்பணிகள் பொறுத்து கட்டணங்களை வசூலித்தல் மற்றும் திருப்பிக் கொடுத்தலுக்காக வகைமுறை செய்வது பொறுத்து ஒருசில இடர்ப்பாடுகளை நீக்கும் பொருட்டு மேற்சொன்ன ஒழுங்குமுறை விதிகளுக்கு ஒரு சில திருத்தங்கள் பிறப்பிப்பது அவசியமெனக் கருதுவதாலும்,

தற்போது இதற்காக, 2003 ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 36/2003) 181 ஆம் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும், 86 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் (அ) கூறின் மூலம் அதற்குவழங்கப்பட்டஅதிகாரங்களைச் செலுத்தி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், (இதன் பின்பு இதில் முதன்மை ஒழுங்குமுறைவிதிகள் என்று குறிப்பிடப்படும்) 2004 ஆம் ஆண்டு தமிழ்நாடுமின்சாரஒழுங்குமுறைஆணைய–கட்டணங்கள்மற்றும் அபாரதங்கள்ஒழுங்குமுறைவிதிகளுக்கு, பின்வரும் திருத்தங்களைச் செய்கிறது.

**1. குறுந்தலைப்புமற்றும் தொடக்கம்:–**

(அ) இந்தஒழுங்குமுறைவிதிகள் 2012 ஆம் ஆண்டு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணைய கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் (திருத்தம்) ஒழுங்குமுறைவிதிகள்என்றுவழங்கப் பெறும்.

(ஆ) இவை, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட நாளிலிருந்து நடைமுறைக்கு வரும்.

**2. புதிய 10ஆம் ஒழுங்குமுறைவிதியினைப் புகுத்துதல்:–**

முதன்மை ஒழுங்குமுறைவிதிகளின் 9 ஆம் ஒழுங்குமுறைவிதிக்குப் பின்பு, பின்வரும் ஒழுங்குமுறைவிதி புகுத்தப்படுதல் வேண்டும், அதாவது,

“10. ஒரு சில நேர்வுகளில் கட்டணங்களைச் செலுத்துதல்அல்லது திருப்பிக் கொடுத்தல்–

(1) மனுதாரர் மனுவை கோப்பிலிடுவதற்கு மற்றும் எண்ணிடப்படுவதற்கு முன்பு திரும்பப் பெறுமிடத்து, அவர் ஆணையத்தினால் விதிக்கப்படலாகும் செலவுத் தொகையையும், இவை தவிர, மனுவை ஏற்றுக் கொள்வதற்கான நடைமுறையில் செய்ய நேர்ந்த நியாயமான செலவுகள்அனைத்தையும் செலுத்துவதற்குக் கடப்பாடுடையவராவார் மற்றும் அதனைக் கழித்தபின்பு, மனுதாரரால் செலுத்தப்பட்ட கட்டணத்தின் மீதமுள்ளதொகைஅவருக்குத் திருப்பியளிக்கப்படலாம்.

(2) அவ்வாறு திரும்பப் பெறுதலின் பேரில், மனுதாரர், அத்தகைய வழக்குப் பொருள் அல்லது அத்தகைய வழக்குப் பொருளில்உள்ளடங்கிய பகுதி கோரிக்கை பொறுத்து புதிய மனு எதனையும் தாக்கல் செய்வதிலிருந்து தடுக்கப்படுவார்.

(3) உயர்நீதிமன்றத்தினால் நீதிப்பேராணைமனு, ஆணையத்திற்கு சட்டத்திற்கிணங்க முடிவு செய்வதற்காக மாற்றியனுப்பப்படுமிடத்து அல்லது உயர்நீதிமன்ற உத்தரவின்படி ஆணையத்தின் முன்பு மனுதாரர் மனுவைத் தாக்கல் செய்யுமிடத்து இந்த ஒழுங்குமுறைவிதிகளின்படியான கட்டணங்கள் மனுதாரரால் செலுத்தப்படுதல் வேண்டும்”.

*(ஆணையத்தின் ஆணைப்படி)*

**(சி.குணசேகரன்)**
செயலாளர்
தமிழ்நாடுமின்சாரஒழுங்குமுறைஆணையம்